**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

**முன்னிலை :–திருமதி.வே.உதயசூரியா, எம்,எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்.**

**2023 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ம் நாள் திங்கட்கிழமை**
**இடைநிலை மனு எண்.226/2022**
**உள்**
**அசல் வழக்கு எண்.73/2015**

அறிவழகன் .. மனுதார்/வாதி

... எதிர் ...

1.திரு.வேலாயுதம்

2.திரு.மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல்

3.திரு.கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, திண்டுக்கல்

4.திரு.வட்டாட்சியர், நத்தம்,

5.திரு.செயல் அலுவலர், நத்தம் ..எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது 17.08.2022 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 23.01.2023 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பாலகிருஷ்ணன், அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.வைரவசுந்தரம், அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.P.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், மனு மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்,

## உத்தரவு

1) இம்மனுவானது அசல் வழக்கின் வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 16 மற்றும் 17 ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

V UDAYASURIYA Digitally signed by V UDAYASURIYA Date: 2023.01.23 10:14:21 +0530

2) **மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதியாவார். இம்மனுதாரர் எதிர்மனுதாரர்கள் மீது விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வரும் நிலையில் மேற்படி வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக்கோரி இ.ம.எண்.335/2016 என்ற மனுவை தாக்கல் செய்து அம்மனு 28.04.2017 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி 05.12.2018 தேதியில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தில் வாதிக்கும், வாதியின் உறவினர்களுக்கு மட்டும் பாத்தியப்பட்ட பட்டா பொதுப்பாதையான நத்தம் புல எண். 531/34. 531/35. 534/36 ஆகியவற்றில் 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளது தெரியவருவதாகவும், அதனால் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள விபரங்களை வழக்குரையில் பத்தி 9(a) ஆக சேர்க்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

3) மேலும், வழக்குரையின் பக்கம் 6 ல் அ–பரிகாரத்தை முழுவதும் நீக்கிவிட்டு 1வது இலக்கச் சொத்தின் வழியாக சென்றுவர வாதி உரிமையுள்ளவர் என்று விளம்புகை பரிகாரம் வழங்கி உத்தரவிடவேண்டும் என்று திருத்தம் செய்யவும், அதேபோல், ஆ–பரிகாரத்தை முழுவதுமாக நீக்கிவிட்டு நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் கண்டுள்ளவாறு ஆக்கிரமிப்பு பகுதியை 1ம் பிரதிவாதி தன் சொந்த செலவில் இடித்து அப்புறப்படுத்தவேண்டும் என செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடவேண்டும் என திருத்தம் செய்யவும், வழக்குரை பக்கம் 8ல் 2வது இலக்கச் சொத்து என்பதை முழுவதும் நீக்கிவிட்டு அதற்கு பதிலாக மனுவில் கண்டுள்ளவாறு திருத்தம் செய்யவேண்டும் எனவும், வழக்குரையின் ஆவணப்பட்டியலில் நீதிமன்ற ஆணையர் அறிக்கையை ஆவணமாக சேர்க்க வேண்டும் என்றும், மேற்கண்ட திருத்தங்கள் வழக்கிற்கு



V UDAYASURIYA Digitally signed by V UDAYASURIYA Date: 2023.01.23 10:14:31 +0530

அவசியமானது என்றும், ஆகையால் இம்மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4) 1ம் எதிர்மனுதாரரின் எதிருரை சுருக்கம்:**

1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையில் மனுவில் கோரியுள்ளபடி நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் கண்டுள்ள விபரங்களை வழக்குரையில் சேர்க்க சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், மேலும், மனுதாரர் கோரியுள்ள விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம், நீதிமன்ற ஆணையர் அறிக்கையின் அடிப்படையில் கோரப்பட்டுள்ளதாகவும், அதனால் 05.12.2018 தேதியிட்ட அறிக்கையின்படி கோரப்படும் பரிகாரங்கள் காலவரம்பு சட்டத்தால் பாதிக்கப்பட்டது என்றும், நீதிமன்ற ஆணையர் நிலவுடைமை திட்டத்திற்கு முன்பு உள்ள வரைபடம் நகல் கொண்டு நிலஅளவை செய்யாமல் மேற்படி பணி நிலுவையில் உள்ள நிலையில் நீதிமன்ற ஆணையர் அறிக்கையின் அடிப்படையில் வழக்குரையை திருத்தம் செய்யக்கோருவது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

5) இவ்வழக்கின் 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த அரசு வழக்கறிஞர் 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என்று தெரிவித்துள்ளார். எனவே, இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

6) இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், மனுதாரர் மனுவில் கோரியுள்ளவாறு அசல் வழக்கினை திருத்தம் செய்ய அனுமதித்து உத்தரவிட வேண்டியது அவசியமா? என்பதே ஆகும்.

V UDAYASURIYA Digitally signed by V UDAYASURIYA Date: 2023.01.23 10:14:40 +0530

7) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இம்மனுவின் அசல் வழக்கானது இம்மனுதாரரால் வழக்கு 2 வது இலக்கச் சொத்தை பாதையாக பயன்படுத்த வாதி உரிமையுள்ளவர் என்று விளம்புகை செய்யக்கோரியும், அதை 1ம் பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மேலும், அசல் வழக்கில் வழக்குச் சொத்துக்களை பார்வையிட்டு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நிலஅளவையர் உதவியுடன் சொத்தின் அமைப்பையும், அளவுகளையும் குறியீடு செய்வதற்காக ஆணையர் நியமனம் கோரி அசல் வழக்கின் 1ம் பிரதிவாதியும்,இம்மனுவின் 1ம் எதிர்மனுதாரரால் இ.ம.எண்.335/2016 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு இந்நீதிமன்றத்தால் 28.04.2017 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்தரவின் அடிப்படையில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு அவர் வழக்குச் சொத்துக்களை பார்வையிட்டு ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார்.

9) மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் நிலவுடைமை திட்டத்திற்கு பிந்தைய புல வரைபடத்தை வைத்து சொத்தை ஆய்வு செய்ததாகவும், அதில் புல எண்.212/15 கிராம வட்ட கணக்குகளில் உள்ளானதால் புல எண்.531/33, 34, 35, 36 ஆகிய சொத்துக்களை பார்வையிட்டதாகவும் தெரிவித்து அதன் அளவுகளை குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கையின் மூலம் 1ம் எதிர்மனுதாரர் புல எண். 531/34,531/35. 531/36 ஆகியவற்றில் ஆக்கிரமிப்பு செய்து கிழமேல் 6 அடி உயரத்திற்கு மதில்சுவர் எழுப்பியுள்ளதாக காட்டப்பட்டுள்ளதாகவும், அந்த விபரத்தை வழக்குரையில் சேர்க்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதற்கு 1ம்

V UDAYASURIYA
Digitally signed by V UDAYASURIYA
Date: 2023.01.23 10:14:48 +0530

எதிர்மனுதாரர் தரப்பில் அவ்வாறு சேர்க்க இயலாது என்ற ஒரே ஆட்சேபணையை தவிர எதனால் சேர்க்கஇயலாது என்று குறிப்பிட்ட ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

10) மேலும், மனுதாரர் தரப்பில் மேற்கண்ட ஆக்கிரமிப்பு தொடர்பாக வழக்குரையில் கேட்கப்பட்டுள்ள அ–பரிகாரத்தை நீக்கிவிட்டு வழக்கு 1வது இலக்கச் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்ட வீட்டிற்கு சென்றுவர பயன்படுத்தும் பொதுப்பாதை வழியாக சென்றுவர வாதிக்கும், அவரது உறவினர்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கேட்கப்படவேண்டும் என்றும், ஆக்கிரமிப்பை நீக்குவதற்கு 1ம் எதிர்மனுதாரர் மீது செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்கப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கண்ட பரிகாரங்கள் காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

11) மேற்கண்ட திருத்தல் மனு விபரங்களை பரிசீலனை செய்ததில், புல எண்.531/34, 531/35 531/36 ஆகியவற்றில் ஆக்கிரமிப்பு இருப்பதாக ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தின் மூலம் தெரியவருகிறது. எனவே, அதுகுறித்தும் ஆக்கிரமிப்பை அகற்றுவது குறித்தும் பரிகாரம் கோர வாதி உரிமையுடையவர் என்றும், மேற்கண்ட பரிகாரங்கள் மனுதாரர் தெரிவித்துள்ளபோல் வழக்கிற்கு அவசியமானது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. மேலும், விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்தைப் பொறுத்தவரையில் காலவரையறையானது ஒரு நபரின் உரிமையை மற்றொருவர் என்று மறுத்துரைக்கிறாரோ அன்றைய தேதியிலிருந்தே கணக்கிடப்படும். அதேபோல், ஒருவர் ஆக்கிரமிக்கப்பட்ட சொத்தை திரும்ப பெறுவதற்கு காலவரையறையானது 12 வருடங்கள் ஆகும். அவ்வாறு

V UDAYASURIYA
Digitally signed by V UDAYASURIYA Date: 2023.01.23 10:15:06 +0530

பார்க்கையில் இவ்வழக்கை பொறுத்தவரை மனுதாரர் கோரியுள்ள விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் காலவரையறையால் பாதிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே, மனுதாரர் கோரியுள்ள மேற்கண்ட திருத்தங்களும் அனுமதிக்கப்படுகின்றது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

12) மேலும், மனுதாரர் வழக்குரையிலும், ஆவணப்பட்டியலிலும் 3 வது ஆவணத்திற்கு அடுத்து 4, 5 ஆவணங்களாக நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் இ.ம.எண்.335/16 மனுவின் உத்தரவு ஆகியவற்றை சேர்க்கவேண்டும் என்று கோரியுள்ளார். அதுகுறித்து பார்கையில், இ.ம.எண்.335/16 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது இவ்வழக்கின் ஒரு அங்கமாகும், அதே போல் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடமும் இவ்வழக்கின் ஒரு அங்கமாகும். அதை நீதிமன்ற சான்றாவணமாக குறியீடு செய்யப்படும். இந்நிலையில் மேற்படி உத்தரவு மற்றும் நீதிமன்ற ஆணையர் அறிக்கை ஆகியவற்றை வழக்குரையில் வாதி தரப்பு சான்றாவணங்களாக சேர்க்கப்படவேண்டிய அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே, அதைப்பொறுத்து திருத்தல் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**13) முடிவாக, இம்மனு பகுதி அனுமதிக்கப்பட்டு, பகுதி தள்ளுபடி செய்யப்படுகிறது. மனுதாரர் தன் மனுவில் கோரியுள்ள 1 முதல் 5 வரையிலான திருத்தங்களை மட்டும் வழக்குரையில் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டும், 6 வது திருத்தத்தைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

V UDAYASURIYA

Digitally signed by V UDAYASURIYA
Date: 2023.01.23 10:15:14 +0530

இவ்வுத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

V UDAYASURIYA Digitally signed by V UDAYASURIYA Date: 2023.01.23 10:15:23 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**நத்தம்.**

<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> **:–இல்லை.**

V UDAYASURIYA Digitally signed by V UDAYASURIYA Date: 2023.01.23 10:15:29 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**நத்தம்.**